



அரியலூர் மாவட்டக் கழகம் சார்பில் ஆண்டிமடத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தளபதி அன்பகம், ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலகம் கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழுவுருவச் சிலையை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### ஆண்டிமடத்தில் ‘தளபதி அன்பகம்’ – ஒன்றியக் கழகக் கட்டிடம்

# பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

அரியலூர்,மார்ச், 13–

அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ஆண்டிமடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ‘தளபதி அன்பகம்’ ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலக கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழு திருவுருவச் சிலைகளைத் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்ட 100 அடி கழகக் இருவண்ணக் கொடியினை ஏற்றிச் சிறப்பித்தார்.

தளபதி அன்பகத்தில், தலைவர் கலைஞர் படிப்பகம் மற்றும் ஆண்டிமடம் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களுக்கான அலுவலகங்களும் செயல்படத் தொடங்கியுள்ளது.

அரியலூர் மாவட்டக் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் இந்த மாபெரும் விழாக்களில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததனர்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார்.

இம்மாபெரும் விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க. கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் அன்பரசு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், செந்தில்குமார், தனசேகர், இரா.கென்னடி, இரா.அண்ணாதுரை, மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, இரா. மணிமாறன், பூ.செல்வ ராஜ், வி. எழில்மாறன்,

தனவேல், நா.கணேசன், தெய்வ.இளையராஜா, ஏ.ஜி.எஸ்.முருகன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், பொதுக்குழு உறுப்பினர் கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம்.ஷாஜகான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண்ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், வீர.சிவா, ச. வசந்தபகலவன், குணசீலன்,தமிழ்மாறன், ஆண்டிடம் கிழக்கு ஒன்றிய மேற்பார்வையாளர் கு.பிரபா கரன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் , பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.






### வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்ட மன்றத் தொகுதியில்

# முடிவுற்ற வளர்ச்சி திட்ட பணிகள் - அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர், மார்ச். 13-

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்ட மன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள வளர்ச்சி திட்ட பணிகள் திறப்பு விழா நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்டப் பொறுப்பாளரும், அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் எம். எல். ஏ. தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்,

கழக தலைவர், முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் நலம் சார்ந்த பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் திட்டமிடப்பட்டு இதற்கான உரியத் திட்ட மதிப்பீட்டுத் தொகையை ஒதுக்கீடு செய்து முடிவுற்ற பணிகள் தமிழ் நாட்டிற்க்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டு சாதனை படைத்த மக்கள் நல ஆட்சியில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்ட மன்றத் தொகுதியில் பின் வரும் முடிவுற்ற வளர்ச்சி திட்ட பணிகளின் திறப்புவிழா இன்று (13.03.2026 -வெள்ளிக் கிழமை) கழக பொது செயலாளர், நீர்வளம் மற்றும் சட்ட துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும் அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் எம். எல். ஏ ஆகிய நாங்கள் காலை 09.00 மணிக்கு வேலூர் ஊராட்சி ஒன்றியம், சதுப்பேரி ஊராட்சியில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் படகு குழாமுடன் இணைந்த சுற்றுலா தளம் திறப்பு விழா மற்றும் காலை 10.00 மணிக்கு அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், இறைவன்காடு ஊராட்சி பாலாற்றில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் தடுப்பு அணை ஆகிய பணிகளை திறந்து வைக்க உள்ளோம்.

மேலும் பகல் 12.00 மணிக்கு அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் அணைக்கட்டில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை மற்றும் பகல் 12.30 மணிக்கு ஒடுக்கத்தூர் பேரூராட்சி ஒடுக்கத்தூரில் ரூ.3.00 கோடியில் நிர்மானிக்கப்பட்ட வார சந்தை, ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் திறப்பு விழா மற்றும் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் ஒடுக்கத்தூர் பேரூரட்சியில் அமைக்கப் பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மையம், ரூ.6.41 கோடி திட்ட மதிப்பீட்டில் பென்னாத்தூர் பேரூரட்சியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் திறப்பு விழா நடைபெற உள்ளது.

இத்திறப்பு விழாவில் வேலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. இரா. சுபலக்ஷ்மி அவர்கள், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M. கதிர்ஆனந்த், மாவட்ட ஊராட்சி குழு மற்றும் திட்ட குழு தலைவர் மு. பாபு, ஒன்றிய செயலாளர்கள் சி. எல். ஞானசேகரன், கோ . குமர பாண்டியன், பி. வெங்கடேசன், என். கஜேந்திரன், பகுதி செயலாளர்கள் ஆர். கே. ஐயப்பன், சி. எம் தங்கதுரை, பேரூர் செயலாளர்கள் தி.மு.ஜாகீர் உசேன், ஆர். பெருமாள் ராஜா, பி. அருள்நாதன் மற்றும் அணைக்கட்டு ஒன்றிய குழு உறுப்பினர் சி. பாஸ்கரன், வேலூர் ஒன்றிய குழு உறுப்பினர் அமுதாஞானசேகரன், ஒடுக்கத்தூர் பேரூராட்சி தலைவர் சத்தியவதிபாஸ்கரன், பள்ளிகொண்டா பேரூராட்சி தலைவர் சுபபிரியாகுமரன், பென்னாத்தூர் பேரூராட்சி தலைவர் பவானிசசிகுமார் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளார்கள்.

எனவே அணைக்கட்டு சட்ட மன்றத் தொகுதிக் குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளரும் அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்!

வேலூர், மார்ச்,13 -

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி அணைக்கட்டு தொகுதி கெங்கநல்லூர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்த நாள் விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் ஆர். காந்தி சிறப்புரை ஆற்றி 2500 பெண்களுக்கு இலவச புடவை

1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை

200 இளைஞர்களுக்கு விளையாட்டு கிட் (Sports Kit)

100 நபர்களுக்கு தையல் இயந்திரம்

சலவை தொழிலாளர்களுக்கு சலவை பெட்டி

சலூன் கடை தொழிலாளர்களுக்கு சவரப் பெட்டி 100 நடைபாதை வியாபாரி களுக்கு தள்ளு வண்டி ஆகியவை வழங்கினார்

இதில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம் எல்ஏ குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமுலு விஜயன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார்,

மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமர பாண்டியன் வேலூர் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன் கணியம்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் கஜேந்திரன் அல்லாபுரம் பகுதி செயலாளர் தங்கதுரை தொரப்பாடி பகுதி செயலாளர் ஐயப்பன் பேரூராட்சி செயலாளர்கள் அருள் நாதன், ஜாகீர் உசேன் பெருமாள் ராஜா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர்கள் பி.வெங்கடேசன்,குமர பாண்டியன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.